சார்பு நீதிமன்றம், பெருந்துறை

MCOP No: 311/2019

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 18 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சஞ்சீவ் குமார் |
| த.பெ/க.பெ | நாச்சிமுத்து |
| கிராமம் | பெருந்துறை |
| மாவட்டம் | |
| வயது | 32 |

ம.சா. 1 நாள் **18.07.2025**

முதல் விசாரணை: **(**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்**)**

ம.சா.1 ஆகிய நான் இம்மனுவின் எம்சிஓபி 311/2019 மனுவில் 1 ம் மனுதாரர். எம்சிஓபி 52/2020 மனுவில் 3 ம் மனுதாரர். இரண்டு மனுவிலும் மனுதாரர் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1 | முதல் தகவல் அறிக்கை | மசாஆ 1 |
| 2 | பார்வை மகசர் | மசாஆ 2 |
| 3 | மாதிரி வரைபடம் | மசாஆ 3 |
| 4 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (பேருந்து) | மசாஆ 4 |
| 5 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (இரு சக்கர வாகனம்) | மசாஆ 5 |
| 6 | நாச்சிமுத்து என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை | மசாஆ 6 |
| 7 | வள்ளியம்மாளின் பிரேத பரிசோதனைஅறிக்கை | மசாஆ 7 |
| 8 | குற்ற இறுதியறிக்கை | மசாஆ 8 |
| 9 | நாச்சிமுத்துவின் இறப்பு சான்று | மசாஆ 9 |
| 10 | வள்ளியம்மாளின் இறப்பு சான்று | மசாஆ 10 |
| 11 | நாச்சிமுத்துவின் வாரிசு சான்று | மசாஆ 11 |
| 12 | வள்ளியம்மாளின் வாரிசு சான்று | மசாஆ 12 |
| 13 | எனது ஆதார் அடையாள அட்டை நகல் | மசாஆ 13 |
| 14 | நாச்சிமுத்து இறப்பிற்கு முன் சிகிச்சை எடுத்ததற்கான மருத்துவ கட்டண ரசீதுகள் ரூ792016/-(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது) | மசாஆ 14 |

மனுப்படி உத்திரவாக கோருகிறேன்

<u>குறுக்கு விசாரணை **(1** மற்றும் **2** ம் எதிர்மனுதாரர் தரப்பில்**)**</u>

விபத்தை நான்நேரில் பார்க்கவில்லை யாரது தவறால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. என் தகப்பனாரின் ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை மனுவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு என் தகப்பனாரின் கவனக்குறைவு தான் காரணம்

என்றும், பேருந்து ஓட்டுநர் விபத்திற்கு காரணமல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ மனைக் கட்டண ரசீதுகள் என் தகப்பனாருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு தான் சிகிச்சை வழங்கப்பட்டது என்பதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று தாக்கல் செய்யாமல் அந்த கட்டணங்களை நான் கோர முடியாது என்றால் சரியல்ல. மருத்துவமனைக் கட்டண ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனக்கும் எனது சகோதரிக்கும் திருமணம் ஆகிவிட்டது. என் சகோதரி தனியாக உள்ளார். நானும் தனியாக உள்ளேன். நானும் என் சகோதரியும் எப்போதும் என் தந்தை மற்றும் பாட்டியின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றும், நான் நஷ்டஈடு கோர முடியாது என்றால் சரியல்ல. எனது தாயார் மனு தாக்கல் செய்தது பின்னிட்டு இறந்து விட்டார். என் அப்பாவின் வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பாட்டியின் வயது, வருமானம் குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.07.18 18:21:34 +0530

Subordinate Judge,
Perundurai.